# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2011 டிசம்பர் திங்கள் 30.12.2011–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

**24.11.2011–ம் தேதிய சாதாரணக்கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள் எண்.4**

இந்நகராட்சி வரவு செலவு அறிக்கை 2010–2011–ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு மதிப்பீடும், 2011–2012 ஆம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு மதிப்பீடும் தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வருடங்களுக்கான வரவு செலவு மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**2010–2011 –ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு மதிப்பீடு மற்றும் 2011–2012–ம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு திட்ட மதிப்பீடு.**

---

**(1) வருவாய் கணக்கு வரவுகள்**

இந்நகராட்சி வருவாய் கணக்கில் 2010–2011–ம் ஆண்டில் ரூ.83,62,485/– வரப்பெற்றுள்ளது.

2011–2012–ம் ஆண்டில் இத்தலைப்பின்கீழ் வரவாக ரூ.84,62,000/– கணக்கிடப்பட்டுள்ளது.

**(2) பொதுநிதிக் கணக்கு**

இந்நகராட்சி பொதுநிதிக் கணக்கில் 2010–2011–ம் ஆண்டில் ரூ.2,60,85,920/– வரப்பெற்றுள்ளது.

2011–2012–ம் ஆண்டில் நகராட்சி நிதியிலிருந்து பொதுநிதி கணக்கிற்கு ரூ.2,63,00,000/– கணக்கிடப்பட்டுள்ளது.

**(3) முன்பண கணக்கு**

2010–2011–ம் ஆண்டிற்கு முன்பணம் கணக்குப்படி ரூ.50,000/– வரப்பெற்றுள்ளது.

2011–2012–ம் ஆண்டில் ரூ.85,000/– கணக்கிடப்பட்டுள்ளது.

**(4) பொதுநிதி சேமிப்பு கணக்கு**

2010–2011–ம் ஆண்டிற்கு சேமிப்பு கணக்கின்படி வரவாக ரூ.6,00,000/– வரப்பெற்றுள்ளது.

2011–2012–ம் ஆண்டிற்கு ரூ.6,50,000/– கணக்கிடப்பட்டுள்ளது.

**(5) அரசுக்கடன் செலுத்தியது**

2010–2011–ம் ஆண்டில் டுபிட்கோ மற்றும் IDSMT கடன் தொகையில் ரூ. 20,50,000/– செலுத்தப்பட்டது.

2011–2012–ம் ஆண்டில் டுபிட்கோ மற்றும் IDSMT கடன் தொகையில் ரூ.50,00,000/– செலுத்த கணக்கிடப்பட்டுள்ளது.

**(6) குடிநீர் வடிகால் கணக்கு**

2010–2011–ம் ஆண்டிற்கு குடிநீர் கணக்கில் ரூ.53,98,900/– வரப்பெற்றுள்ளது.

2011–2012–ம் ஆண்டிற்கு குடிநீர் கணக்கின்கீழ் ரூ. 55,00,000/– கணக்கிடப்பட்டுள்ளது.

**(7) குடிநீர் வடிகால் முன்பணக் கணக்கு**

2010–2011–ம் ஆண்டிற்கு முன்பண கணக்கில் ரூ.10,000/–வரப்பெற்றுள்ளது.

2011–2012–ம் ஆண்டிற்கு வரவாக ரூ.15,000/– கணக்கிடப்பட்டுள்ளது.

**(8) குடிநீர் வடிகால் பொதுநிதிக் கணக்கு**

2010–2011–ம் ஆண்டிற்கு இத்தலைப்பில் ரூ. 53,70,600/–வரப்பெற்றுள்ளது.

2011–2012–ம் ஆண்டிற்கு இத்தலைப்பின்கீழ் ரூ. 54,00,000/– கணக்கிடப்பட்டுள்ளது.

**(9) குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை கணக்கு**

2010–2011–ம் ஆண்டிற்கு இத்தலைப்பில் ரூ. 42,000/–வரப்பெற்றுள்ளது.

2011–2012–ம் ஆண்டிற்கு இத்தலைப்பின்கீழ் ரூ. 2,00,000/–கணக்கிடப்பட்டுள்ளது.

**(10) கல்வி நிதி கணக்கு**

2010–2011–ம் ஆண்டிற்கு இத்தலைப்பில் ரூ. 4,96,400/–வரப்பெற்றுள்ளது.

2011–2012–ம் ஆண்டிற்கு இத்தலைப்பின்கீழ் ரூ. 5,60,000/– கணக்கிடப்பட்டுள்ளது.

**(11) சிறப்பு சாலை திட்டம் 2010–2011 வைப்பு கணக்கு**

2010–2011–ம் ஆண்டிற்கு சேமிப்பு கணக்கில் ரூ. 10,40,00,000/–வரப்பெற்றுள்ளது.

2011–2012–ம் ஆண்டிற்கு இத்தலைப்பின்கீழ் 10,45,00,000/–கணக்கிடப்பட்டுள்ளது.

**வருவாய் நிதி – சாதாரண வரவினம்**

| கணக்கு தலைப்பு எண் | கணக்கு தலைப்பு | 2010–11–ம் ஆண்டு திருத்திய மதிப்பீடு | 2011–12–ம் ஆண்டு உத்தேச மதிப்பீடு |
|---|---|---|---|
| 1001 | சொத்து வரி | 3049000 | 3350000 |
| 1006 | தொழில் வரி | 668770 | 750000 |
| 1017 1018 | உரிமை ஆணை கட்டணம் | 580 | 750 |
| 1019 | கட்டிட உரிமை ஆணை கட்டணம் | 133000 | 160000 |
| 1022 | தினசரிசந்தை கட்டணம் | 503000 | 520000 |
| 1026 | பேருந்து நிலைய கட்டணம் | 180800 | 200000 |
| 1029 | நிலஅளவை கட்டணம் | 6000 | 8000 |
| 1032 | பிஸ்மாங்கர் பீஸ் | 89500 | 100000 |
| 1036 | வணிகவளாக கடைகள் | 1791000 | 2000000 |
| 1039 | கழிப்பிட கட்டணம் | 91350 | 105000 |
| 1044 | இதர கட்டணங்கள் | 584000 | 610000 |
| 1045 | இதர வருமானங்கள் | 206200 | 215000 |
| 1046 | முத்திரைக் கட்டணம் | 416600 | 432000 |
| 1053 | மாநில நிதிக்குழு மானியம் | 15828000 | 18000000 |
| 1054 | நகல் கட்டணம் | 65000 | 85000 |
| 1066 | பலவகைப்பட்ட பிடித்தங்கள் | 28000 | 35000 |
| 1069 | திட்டம் மேற்பார்வை கட்டணம் | 1233300 | 1500000 |
| | சாதாரண வரவினம் மொத்தம் | 24874190 | 28070750 |

**வருவாய் நிதி – சாதாரண செலவினம்**

| கணக்கு தலைப்பு எண் | கணக்கு தலைப்பு | 2010–11–ம் ஆண்டு திருத்திய மதிப்பீடு | 2011–12–ம் ஆண்டு உத்தேச மதிப்பீடு |
|---|---|---|---|
| 2001 to 2010 | ஊதியம் மற்றும் படிகள் | 10765500 | 19500000 |
| 2011 | போனஸ் | 160000 | 200000 |
| 2012 | பயணச் செலவு | 66500 | 100000 |
| 2014 | சீருடைச் செலவினம் | 86500 | 105000 |
| 2015 | தொலைபேசிக் கட்டணம் | 90500 | 105000 |
| 2016 | சாதாரண வாகனங்கள் பராமரிப்பு | 422000 | 475000 |
| 2017 | வழக்கு கட்டணம் | 11900 | 50000 |

| | | | |
|---|---|---|---|
| 2018 | எழுதுபொருட்கள் | 309500 | 350000 |
| 2019 | விளம்பரச் செலவு | 94000 | 105000 |
| 2020 | இதர செலவு | 254000 | 275000 |
| 2023 | வரியினங்கள் தள்ளுபடி செய்வதால் ஏற்படும் செலவு | 573800 | 150000 |
| 2026 | கணனி செலவுகள் | 37300 | 50000 |
| 2028 | வங்கி கழிவுகள் | 2000 | 2500 |
| 2029 | கடனுக்காக செலவு | 442500 | 600000 |
| 2032 | பென்ஷன் | 800000 | 900000 |
| 2033 | இறப்பு மற்றும் ஓய்வுக்கால பணிக்கொடை | – | 500000 |
| 2034 | சிறப்பு சேமநலநிதி | 12000 | 20000 |
| 2036 | தணிக்கைக் கட்டணம் | 10000 | 12000 |
| 2041 | முந்தைய ஆண்டு செலவு | – | – |
| 2047 | தபால் செலவு | 6000 | 10000 |
| 2048 | மின்கட்டணம் அலுவலகம் | 118300 | 150000 |
| 2050 | தளவாடச் சாமான்கள் பழுது பார்த்தல் | 2000 | 3000 |
| 2053 | விடுப்பூதியம் | – | 125000 |
| 2061 | அமர்வுப்படி | 124200 | 135000 |
| 2070 | கனரக வாகனம் பழுது பார்க்கும் செலவு | 298200 | 328500 |
| 2071 | சிமெண்ட்தளம் பழுது பார்க்க | 425600 | 467000 |
| 2072 | தார் சாலைகள் பழுது பார்த்தல் | 940000 | 1025000 |
| 2076 | வடிகால் பழுது பார்த்தல் | 1363000 | 1497000 |
| 2077 | கட்டிடங்கள் பழுது பார்த்தல், மீன் கொட்டகை காய்கறி கொட்டகை, நான்கு சக்கர வாகன கொட்டகை | 1457000 | 1600000 |
| 2088 | தெருவிளக்கு கட்டணம் | 1596000 | 1752000 |
| 2089 | தெருவிளக்கு உதிரி பாகங்கள் வாங்குதல் | 300000 | 400000 |
| 2090 | தினக்கூலி செலவினம் | 550800 | – |
| 2095 | சர்வே கட்டணம் | 20000 | 80000 |
| 2100 | பொதுசுகாதார செலவு | 6600 | 15000 |
| 2101 | பொதுசுகாதார சாதனங்கள் வாங்க | 82750 | 120000 |
| | சாதாரண செலவினம் மொத்தம் | 21428450 | 31207000 |

**மூலதன வரவினம்**

| | | | |
|---|---|---|---|
| 4014 | 12–வது நிதிக்குழு மான்யம் | – | 3400000 |
| " | சிறப்பு சாலை திட்டம் 2010–2011 | 4200000 | 3095000 |
| " | நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நிதி | 1200000 | 2000000 |
| " | சொர்ண ஜெயந்தி | 160000 | 250000 |
| 3028 | பண்டிகை முன்பணம் | 29600 | 35000 |
| 3037 | பயண முன்பணம் | 10000 | 50000 |
| 4016 | ஒப்பந்தக்காரர் வைப்புத் தொகை | 1000000 | 1150000 |
| 4017 | பொருட்கள் விநியோகம் செய்ய வைப்புத் தொகை | 112000 | 120000 |
| 4018 | குத்தகைதாரர் வைப்புத் தொகை | 200000 | 300000 |
| 4020 | இதர வைப்பு தொகைகள் | 30000 | 50000 |
| 4043 | நூலக வரி | 285000 | 300000 |
| | மூலதன வரவினம் மொத்தம் | 7226600 | 10750000 |
| | சாதாரண வரவினம் மொத்தம் | 21428450 | 31207000 |
| | மொத்தம் | 28655050 | 41957000 |

## மூலதன செலவினம்

| கணக்கு தலைப்பு எண் | கணக்கு தலைப்பு | 2010–11–ம் ஆண்டு திருத்திய மதிப்பீடு | 2011–12–ம் ஆண்டு உத்தேச செலவு |
|---|---|---|---|
| 3101 | நிலம் வாங்க | – | 2400000 |
| 3102 | கட்டிடங்கள் கட்ட | 6885800 | 1200000 |
| 3104 | பாலங்கள் கட்ட | 550000 | 1200000 |
| 3105 | நீரோடைகள்கட்ட | 1200000 | 2500000 |
| 3110 | புதிய தெருவிளக்குகள் அமைத்தல் | 500000 | 500000 |
| 3112 | சொர்ண ஜெயந்தி திட்ட செலவுகள் | 200000 | 500000 |
| 3113 | சிமென்ட் சாலைகள் அமைத்தல் | 1227200 | 1500000 |
| 3114 | தார் சாலைகள் அமைத்தல் | 1250000 | 1560000 |
| 3028 | பண்டிகை முன்பணம் | 85000 | 105000 |
| 3037 | பயண முன்பணம் | 1000 | 25000 |
| 4016 | ஒப்பந்தக்காரர் வைப்புத் தொகை | 262000 | 500000 |
| 4017 | பொருட்கள் விநியோகம் செய்ய வைப்புத் தொகை | 6100 | 10000 |
| 4018 | குத்தகைதாரர் வைப்புத் தொகை | 130000 | 200000 |
| 4020 | இதர வைப்பு தொகைகள் | 21000 | 100000 |
| 4004 | அரசு கடன் தவணைத் தொகை செலுத்துதல் | 464500 | 2500000 |
| 4007<br>4008 | இதர கடன் தவணைத் தொகை செலுத்துதல் | – | – |
| | மூலதன வரவினம் மொத்தம் | 12782600 | 14800000 |
| | சாதாரண வரவினம் மொத்தம் | 21428450 | 31207000 |
| | மொத்தம் | 34211050 | 46007000 |

## குடிநீர் கணக்கு
## சாதாரண வரவினம்

| கணக்கு தலைப்பு எண் | கணக்கு தலைப்பு | 2010–11–ம் ஆண்டு திருத்திய மதிப்பீடு | 2011–12–ம் ஆண்டு உத்தேச மதிப்பீடு |
|---|---|---|---|
| 1002 | குடிநீர் வரி | 1524500 | 1700000 |
| 1044 | இதர கட்டணங்கள் | 10000 | 15000 |
| 1081<br>1082 | புதிய குடிநீர் இணைப்பு வரவு | 627000 | 635000 |
| 1083 | குடிநீர் கட்டணம் | 2340000 | 2600000 |
| | | 4501500 | 4950000 |

## :மூலதன வரவினம்

| | | | |
|---|---|---|---|
| 4014 | நாடாளுமன்ற உறுப்பினர் நிதி | – | – |
| | | – | 500000 |
| 4016 | ஒப்பந்தக்காரர் வைப்புத் தொகை | 60000 | 75000 |
| | | | |
| | மூலதன வரவினம் மொத்தம் | 60000 | 575000 |
| | குடிநீர் திட்ட சாதாரண வரவினம் | 4501500 | 4950000 |
| | | 4561500 | 5525000 |

## குடிநீர் கணக்கு – சாதாரண செலவினம்

| கணக்கு தலைப்பு எண் | கணக்கு தலைப்பு | 2010–11–ம் ஆண்டு திருத்திய மதிப்பீடு | 2011–12–ம் ஆண்டு உத்தேச மதிப்பீடு |
|---|---|---|---|
| 2001 to 2010 | ஊதியம் மற்றும் படிகள் | 167000 | 180000 |
| 2020 | இதர செலவுகள் | 7600 | 9000 |
| 2087 | மின்கட்டணம் | 1543500 | 2000000 |
| 2125 | குடிநீர் திட்டத்திற்கு பழுது பார்த்தல் | 200000 | 500000 |
| | சாதாரண செலவினம் மொத்தம் | 1918100 | 2689000 |

## மூலதன செலவினம்

| கணக்கு தலைப்பு எண் | கணக்கு தலைப்பு | 2010–11–ம் ஆண்டு திருத்திய மதிப்பீடு | 2011–12–ம் ஆண்டு உத்தேச செலவு |
|---|---|---|---|
| 3132 | புதிய குழாய்கள் அமைத்தல் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி | 410000 | 9600000 |
| 3134 | புதிய ஆழ்குழாய் கிணறு | 300000 | 600000 |
| 4016 | ஒப்பந்தக்காரர் வைப்புத் தொகை | 40000 | 50000 |
| 4004 | கடன் தவணை செலுத்துதல் | 50000 | 50000 |
| | மூலதன செலவினம் மொத்தம் | 800000 | 10300000 |
| | குடிநீர் கணக்கு சாதாரண செலவினம் | 1918100 | 2689000 |
| | மொத்தம் | 2718100 | 12989000 |

ஆணையாளர்
குளச்சல் நகராட்சி
(ந.க.எண். 5630/2011/பி1)

**தீர்மானம் எண்.42: அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

குளச்சல் நகராட்சிப் பகுதியில் கட்டிடம் கட்டுவதற்கு வரைபட அனுமதி கோரி வரும் விண்ணப்பங்களின் மீது வசூல் செய்யப்படும் உரிமக்கட்டணம் மற்றும் அபிவிருத்திக் கட்டண விகிதங்கள் 2002–ஆம் வருடத்தில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகும், இக்கட்டணங்கள் நிர்ணயம் செய்து சுமார் 10 வருடங்கள் ஆகின்றதாலும் தற்போதுள்ள கட்டணம் மிகவும் குறைவாக உள்ளதாலும், பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகள் மேற்கொள்ளும் பொருட்டு நகராட்சியின் நிதிநிலையினை மேம்படுத்தும் நோக்கத்துடனும், கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

| வ எண். | இனங்கள் | ஏற்கனவே உள்ள கட்டண விகிதம் ஒரு வருடத்திற்கு. (ரூ) | தற்போது நிர்ணயம் செய்துள்ள கட்டண விகிதம் மூன்று வருடங்களுக்கு (ரூ) |
|---|---|---|---|
| I | **உரிமக்கட்டணம்** | | |
| 1. | கட்டிடம் கட்டுதல் 200 சதுர அடிக்கு | 32 | 200 |
| 2. | கழிவறை ஒன்றிற்கு | 62 | 100 |
| 3. | கட்டிடம் கட்டும் இடம் மேற்பார்வைக் கட்டணம். | 27 | 200 |
| 4. | செப்டிக் டேங்க் | 62 | 100 |
| 5. | கிணறு ஒன்றிற்கு | 22 | 100 |

| | | | |
|---|---|---|---|
| 6. | மதில் சுவர் | 200 | 10/1RM |
| 7. | அபராதக்கட்டணம் | 200 | 500 |
| 8. | கட்டிடம் கட்டும் இடம் அங்கீகாரம்<br>a).1 ஏர் வரை<br>b).2 ஏர் முதல் 4 ஏர் வரை | <br>12<br>22 | <br>100<br>200 |
| II | **அபிவிருத்திக் கட்டணம்** | | |
| 1. | கட்டிடம் கட்டுதல்<br>கட்டிடம் –1 சதுர மீட்டருக்கு<br>(குடியிருப்பு & வணிகம்) | மூன்று<br>வருடங்களுக்கு<br>2.50 | குடியிருப்பு – 2.50<br>வணிகம் – 5.00 |
| 2. | கட்டிடம் கட்டும் மனை<br>1 சதுர மீட்டருக்கு<br>(குடியிருப்பு & வணிகம்) | மூன்று<br>வருடங்களுக்கு<br>1.00 | குடியிருப்பு – 1.00<br>வணிகம் – 2.00 |

அ.குறிப்பு: தற்போது உள்ள கட்டணங்கள் பத்து வருடங்களுக்கு முன்பு நிர்ணயம் செய்யப்பட்டதாகும். நகராட்சியின் நிதிநிலைமையை மேம்படுத்தவும், பொதுமக்களுக்கான பணிகளை தொய்வின்றி செய்யவும் புதிய கட்டண விகிதங்களை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.tpi/811/2011)

**தீர்மானம் எண்.43: அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு, கட்டிடம் வரைபட அனுமதி கோரும் விண்ணப்பங்கள் கீழ்காணும் தொகையில் நிர்ணயம் செய்யப்படுகிறது.**
**வரிசை எண்.1ல் உரிமைகட்டண தொகை நிர்ணயத்தில்**
**இனம் வ.எண்.1க்கு 3 வருடங்களுக்கு ரூ.100 எனவும்**
**இனம் வ.எண்.3க்கு 3 வருடங்களுக்கு ரூ.100 எனவும்**
**இனம் வ.எண்.7க்கு அபராதகட்டணம் ரூ.300 எனவும்**
**இனம் வ.எண்.8க்கு 3 வருடங்களுக்கு ரூ. 50 எனவும்**
**இனம் வ.எண்.8(b)க்கு 3 வருடங்களுக்கு ரூ.100 எனவும் நிர்ணயம் செய்யப்பட்டது, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை எண் 201 நாள் 30.10.1998–ன்படி ஒரு முறைமை வல்லுனர் (System Analysis) 7 மண்டல இயக்குநரகத்திற்கு ஏழு எண்ணம் திட்ட அமைப்பாளர் (Programmer) 103 நகராட்சிகளுக்கு 103 எண்ணம் உதவி திட்ட அமைப்பளர் (Assistant Programmer) மற்றும் 59 எண்ணம் புள்ளி விபர குறிப்பாளர் (Data Engry Operator) பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை எண்.57 நாள் 30.04.2007–ன்படி மூன்றாம் நிலை நகராட்சிகளுக்கு 50 எண்ணம் புள்ளி விபர குறிப்பாளர் (Dtat Entry Operator) பணியிடங்களும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அரசாணை எண். 86 நாள் 18.06.2007–ன்படி 7 மண்டல இயக்குநரகத்திற்கு 8 எண்ணம் புள்ளி விபர குறிப்பாளர் (Data Entry Operator) பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டது.

மேற்கண்ட பணியிடங்களில் பணியமர்த்திய பணியாளர்களுக்கு தமிழ்நாடு நகராட்சி தகவல் தொழில் நுட்ப பணி விதிகள் 2010 என விதிமுறை வகுத்து சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிள் கடித எண் 5163/2003/IT-1 நாள் 24.10.2010–ன்படி அரசின் அனுமதி கோரியதற்கு அரசு கடித எண் 16288/ME-1 2008–14 நாள் 15.11.2011–ல் நகராட்சிகளில் மன்ற அனுமதி பெற்று அனுப்பி வைக்கவும் மற்றும் இல்லாத பட்சத்தில் தேவையான நடவடிக்கை எடுக்கவும் தெரிவித்துள்ளதாக தெரிவித்து மேற்படி பணியிடங்களுக்கு தேவையான மன்ற அனுமதி பெற்று அனுப்பி வைக்க அறிவுறுத்தி வரப்பெற்ற சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் எண்.5163/2003/IT-I நாள் 22.11.2011–ஐ மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அ.குறிப்பு</u>

பொருளில் கண்ட கணினி உதவி திட்ட அமைப்பாளர் பணியிடம் நகராட்சிகளில் தோற்றுவிக்கப்பட்டதால் நகராட்சிப் பணியான வரி மற்றும் வரியில்லா இன வசூல், பிறப்பு இறப்பு சான்று வழங்குதல், கட்டிட அனுமதி வழங்குதல் நகராட்சியில் வரவு மற்றும் செலவு கணக்குகள் போன்ற அனைத்து பணிகளும் கணினி மயமாக்கப்பட்டுள்ளது. இதனால் நகராட்சியில்

மேற்கண்ட பணிகளை பொதுமக்களுக்கு சிறப்பான முறையில் வழங்க இயலுகிறது. மேற்படி கணினிப் பணிகளை நகராட்சி பணியாளர்கள் மூலம் செயல்படுத்தினாலும் கணினி மென்பொருள் (Soft ware) தொழில் நுட்பத்தில் அவ்வப்போது ஏற்படும் குறைகளை களையவும், மேற்படி கணினிப் பணிகளை மேற்பார்வையிடவும் நகராட்சிக்கு கணினி உதவி திட்ட அமைப்பாளர் பணியிடம் அவசியம் தேவைப்படுகிறது. எனவே இந்நகராட்சியில் கணினி உதவி திட்ட அமைப்பாளர் மற்றும் புள்ளி விபர குறிப்பாளர் பணியிடம் தோற்றுவிக்கவும் பணியாளர்களை நியமனம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 7798/2011/சி1)

**தீர்மானம் எண்.44: அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்கு சொந்தமான அம்பேத்கார் தினசரிச்சந்தையில் ஆக்கிரமிப்புகள் அப்புறப்படுத்த முற்பட்டது தொடர்பாக திரு.ஜஸ்டின் செல்வகுமார் என்பவர் இரணியல் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No.218/2011–ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கினை நகராட்சி சார்பில் ஏற்று நடத்துவதற்கு வழக்கறிஞர் திரு.எ.என்.லிவிங்ஸ்டன் என்பவரிடம் ஒப்படைக்கவும், அதற்கான செலவிற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு</u> : 1) அனுமதிக்கலாம்.

2) வழக்கின் அவசர அவசியத்தைக் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று திரு.எ.என்.லிவிங்ஸ்டன் என்பவரிடம் ஒப்படைத்தமையையும், அதற்கான செலவிற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.45: அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து தற்போது தற்காலிக பணிநீக்கத்திலுள்ள வருவாய் உதவியாளர் செல்வி.சாந்தி சம்மந்தப்பட்ட வழக்கு எண். W.P.No.10529/2011–க்கு சென்னை உயர்நீதி மன்றம், மதுரை கிளையில் எதிர் வாதுரை சமர்ப்பித்து உரிய மேல்நடவடிக்கை மேற்கொண்டுள்ள அரசு வழக்கறிஞர் திரு.கே.கிருஷ்ணதாஸ் அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ. 7,500/– வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 7610/2011/சி1)

**தீர்மானம் எண்.46: அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு எண். TN.74-V-3530 –ன் 4 டயர்கள் மற்றும் டியூப்கள் தேய்ந்து மிகவும் மோசமாக பழுதடைந்துள்ளதால், நகராட்சி பணிகளில் மேற்படி ஈப்பின் அவசியத்தை கருத்தில் கொண்டு பழுதடைந்துள்ள 4 டயர்கள் மற்றும் டியூப்களை மாற்றி புதிதாக 4 டயர்கள் மற்றும் டியூப்களை பொருத்துவதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.24,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 5030/2007/அ2)

**தீர்மானம் எண்.47: அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மினி லாரி TN-74-T-5508–ன் பழுதான கிளட்ச் மாற்றி புதிதாக கிளட்ச் பொருத்துவதற்கு உத்தேச செலவுத் தொகை ரூ.11,000/–க்கு அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி 18.11.2011–ல் பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 07.12.2011–ல் கீழ்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | M/s.KSSS ஆட்டோமொபைல்ஸ், நாகர்கோவில். | மதிப்பீட்டைவிட 0.09% குறைவு (ரூ.10,990/– ) |
| 2 | M/s. மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில். | மதிப்பீட்டைவிட 1.82% குறைவு (ரூ.10,800/– ) |

நகரின் பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் 07.12.2011–ல் வரப்பெற்ற மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் நிறுவன ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரித்து பணி உத்தரவு வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** அவசர அவசியம் கருதி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மணி மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனம் ரூ.10,800/–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளது. எனவே இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

(ந.க.எண். 2913/2009/எச்1)

**தீர்மானம் எண்.48: அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேருந்து நிலையத்திற்கு அருகில் ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டில் உயர்கோபுர மின்விளக்கு அமைக்கும் பணியினை 2011–12 –ம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல்முறை எண்.1983/11/அ3 நாள் 16.12.2011–ன் மூலம் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 12.01.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் விவரங்கள் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண். 7435/2011/இ1)

**தீர்மானம் எண்.49: அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 9**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரிச்சந்தையில் அமைந்துள்ள கவியரசு கண்ணதாசன் வணிவ வளாக முதல் தளத்தில் அமைந்துள்ள கடை எண்.21, 22, 28 ஆகியவற்றை குத்தகைக்கு எடுத்த குத்தகைதாரர் வாடகைத் தொகை செலுத்தாத காரணத்தால் கடையின் குத்தகை உரிமத்தை ரத்து செய்வதற்கும், வைப்பு தொகையினை வாடகைத் தொகைக்காக நகராட்சி கணக்கில் ஈடு செய்வதற்கும், இந்நகர்மன்ற தீர்மானம் எண். 789 நாள் 27.02.2009–ன் மூலம் ஒப்புதல் அளித்ததின் அடிப்படையில் குத்தகை உரிமம் ரத்து செய்யப்பட்டு வைப்பு தொகை ஈடு செய்யப்பட்டது. அதன் பின்னர் மேற்படி கடைகள் குத்தகைக்கு விடுவதற்கு மறுஏலம் கோரப்பட்டும் எவரும் குத்தகைக்கு எடுக்க முன்வராமல் காலியாகவே உள்ளது. தற்போது திரு.ஆர்.ஜே.சங்கர் (கடை எண்.28) திரு.சி.ஐயப்பன் (கடை எண்.21, 22 மாத வாடகைக்கு எடுக்க விண்ணப்பித்துள்ளார். போட்டியாளர்கள் எவரும் இல்லாத நிலையில் நகராட்சிக்கு ஏற்படும் வருவாய் இழப்பை கருத்தில் கொண்டு நகராட்சி நிர்ணயித்துள்ள வாடகைத் தொகை ரூ. 1,000/– ல் மாத வாடகைக்கு விடுவதற்கும், முன்வைப்பு தொகை செலுத்துவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். அ2/2035/2011)

**தீர்மானம் எண்.50: அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கதவு எண்கள் 4/705, 7–66/1, 12–58எ, 12–68பி கொண்ட கட்டிடத்தின் சொத்துவரி, குடிநீர் கட்டண வரி நிலுவை இருந்த காரணத்தினால் 2010 மார்ச்–ல் குடிநீர் இணைப்பு துண்டிக்கும் பணி மேற்படி கட்டிடத்திற்கு மேற்கொள்ளப்பட்டது. ஆனால் உரிய பதிவுகள் மற்றும் கணினியில் பதிவுகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. ஆகவே மேற்படி கட்டிடங்களுக்கு குடிநீர் இணைப்பின் கேட்பானது 01.04.2011 முதல் 01.10.2011 வரை கேட்பு எழுப்பப்பட்டுள்ளது.

தற்போது மனுதாரர்கள் குடிநீர் இணைப்பு கோரி மனு செய்துள்ளார்கள். ஆகவே மனுதாரர்கள் மனுவின் மீது மேல்நடவடிக்கை தொடர மேற்படி குடிநீர் இணைப்பு துண்டிப்பு செய்த காலத்திலிருந்து தற்போது நடப்பு ஆண்டு காலத்திற்கான தொகையினை நீக்கம் செய்ய மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2042/2007/அ1)

**தீர்மானம் எண்.51: அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சிக்குட்பட்ட பாலத்தன்கரையில் வி.கே.பி.டாங்க்–க்கு செல்லும் G.I. Pumping line மற்றும் பாலத்தன்கரை பம்பு ரூம் அருகிலுள்ள Air valve, துறைமுகத்தெரு கோயில் முன்னால் உள்ள டாங்க் அருகில் 5" Sluice valve, Mercandile Bank முன்னால் 5" Sluice valve, தங்கம் மருத்துவமனை முன்னால் 4" Sluice valve மேலும் சாஸ்தான்கரை ஸ்கூல் முன்னால் 3" Sluice valve, புதுத்தெருவில் க.எண்.2/104சி அருகில் 3" Sluice valve, பண்டாரவிளை செல்லும் திருப்பில் க.எண்.2/109 அருகில் 3" Sluice valve ஆகிய Sluice valve–கள் பழுதடைந்துள்ளதால் அப்பகுதியில் கொடுக்கப்படும் குடிநீர் விநியோகம் தடைபட்டுள்ளது. எனவே உள்ளாட்சி தேர்தல் நடத்தை விதி அமுலில் இருந்ததாலும், போர்க்கால அடிப்படையில் குடிநீர் பணி அவசர அவசியம் கருதியும், அப்பகுதி பொதுமக்கள் நலன் கருதியும், நகராட்சிகள் சட்டம் பிரிவு 15–ன்கீழ் மேலே குறிப்பிட்டுள்ள இடங்களில் Sluice valve, Air valve ஆகியவற்றை மாற்றி அமைப்பதற்கு மதிப்பீடு ரூ. 60,000/– க்கு தயாரிக்கப்பட்டு பணி மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.குறிப்பு : குடிநீர் பணி அவசர அவசியம் கருதி பிரிவு 15–ன்கீழ் மேற்படி பணி செய்ததை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2042/2007/அ1)

**தீர்மானம் எண்.52: அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மார்க்கெட் ரோட்டில் இயங்கி வரும் KVTCMS – குளச்சல் டவுண் என்ற பொது விநியோகக் கடையில் சுமார் 1000 குடும்ப அட்டைதாரர்கள் ரேசன் பொருட்கள் வாங்கி பயன் பெறுகின்றனர். இந்த கடையில் வார்டு எண். 16, 17, 18, 19, 24 ஆகிய பகுதிகளில் வசிக்கும் குடும்ப அட்டைதாரர்கள் பொருட்கள் வாங்கி வருகிறார்கள். மேற்படி கடை சில வார்டு பகுதியினருக்கு தொலைவில் இருப்பதாலும், பெண்கள் எளிதில் செல்வதற்கு சிரமப்படுவதாலும், அத்தியாவசியப் பொருட்கள் எல்லா அட்டைக்கும் கிடைப்பதில் சிரமம் உள்ளதாலும், மேற்படி கடையின் குடும்ப அட்டைதாரர்களின் எண்ணிக்கையை இரு பகுதியாக பிரித்து 16, 18, 19 வார்டு மக்களுக்காக அவர்களின் பகுதியில் புதிய நியாயவிலைக் கடையும், வார்டு 19 நெசவாளர் தெருவில் புதிதாக அமைத்து தர குமரி மாவட்ட வழங்கல் அதிகாரிக்கு நகர்மன்றம் பரிந்துரை செய்யலாம்.

**அ.குறிப்பு :** மன்றம் பரிந்துரை செய்யலாம்.

(ந.க.எண். அ1/7792/2011)

**தீர்மானம் எண்.53: ஒத்திவைக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

இந்நகராட்சி குடிநீர் வினியோக லாரி TN 74-Z 5304–ன் மின்கலம் பழுதடைந்துள்ளது. அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு பழுதடைந்துள்ள மின்கலத்தை மாற்றி புதிய மின்கலம் பொருத்துவதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 8,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/5754/2010)

**தீர்மானம் எண்.54: அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்
குளச்சல் நகராட்சி

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2011 டிசம்பர் திங்கள் 30.12.2011—ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 03.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

இந்நகராட்சி அலுவலக கட்டிடத்தின் மின் இணைப்புக்கான மெயின் சுவிட்ச் பழுதடைந்துள்ளதால் அலுவலகத்தில் அடிக்கடி மின்தடை ஏற்பட்டு வருகிறது. எனவே பழுதடைந்துள்ள மெயின் சுவிட்சை மாற்றி புதிய மெயின் சுவிட்ச் பொருத்துவதற்கும், மேலும் அடிக்கடி மின்தடை ஏற்படுவதால் மின் இணைப்பு மாற்றியும் பொருத்தப்படவேண்டியுள்ளது. அதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.5,000/—த்திற்கு இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1672, நாள் 29.07.2011—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. ஆனால் மேற்படி மெயின் சுவிட்ச் மாற்றுதல் மற்றும் மின்இணைப்பு மாற்றி பொருத்துதல் ஆகிய பணிகளுக்கு ரூ.10,000/— உத்தேச செலவினமாகும் என்பதால் கூடுதலாக ரூ.5,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 3483/2011/இ1)

**தீர்மானம் எண்.55: அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட அண்ணாசிலை பகுதியில் புதிய ரேசன் கடை கட்டுவதற்கு இடையூறாக உள்ள Stay கம்பியை அகற்றுவதற்கு மதிப்பீட்டு கட்டணம் ரூ.1,930/— ஐ செலுத்த கேட்டு தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை செலுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 5643/2009/இ1)

**தீர்மானம் எண்.56: அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சிங்கன்காவு மெயின்ரோடு சாஸ்தா கோயில் முதல் களிமார் பாலம் வரை அமைந்துள்ள மழைநீர் வடிகால் ஓடையில் மழையினால் அடைப்பு ஏற்பட்டு தண்ணீர் தேங்கி பொதுமக்களுக்கு இடையூறாகவும், பொதுசுகாதார சீர்கேட்டை விளைவிக்கும் வகையிலும் உள்ளதால், அதனை ஜே.சி.பி. மூலம் தூர் வாரி அடைப்புக்களை சரி செய்வதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,62,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 7629/2011/இ1)

**தீர்மானம் எண்.57: அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி மூலம் பொதுமக்களுக்கு விளம்பரம் மேற்கொள்ள 27.12.2011 அன்று ஒப்பந்தப்புள்ளி (ம) மறு ஏலம் கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திசோன் மீடியோ, சுப்பிரமணிய வணிக வளாகம், குளச்சல் என்ற நிறுவனம் ஒரு வருட குத்தகையாக ரூ. 61,743/— அதிகபட்சமாக கோரியுள்ளார். ஆகவே மேற்படி நிறுவனத்திற்கு குத்தகைக்கு அளிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : 21.09.2011 அன்று நடைபெற்ற ஏலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட தொகையினை விட ரூ. 35,743/— அதிகப்படியாக ஏலக்கேள்வி கோரப்பட்டுள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 6536/2010/அ1)

**தீர்மானம் எண்.58: அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சியில் வார்டு எண்.17–க்குட்பட்ட அழகனார்கோட்டைவிளையில் குடிநீர் பகிர்மான குழாய் 2'' மற்றும் 3'' பிவிசி பைப்பு பதிக்கப்பட்டு குடிநீர் வினியோகம் நடைபெற்று வருகிறது. 2'' பகிர்மானக் குழாயிலிருந்து 3'' பகிர்மான குழாய்க்கு தண்ணீர் செல்வதால் தண்ணீர் அழுத்தம் குறைந்து குடிநீர் விநியோகம் சீராக இல்லை. ஆகவே 2'' பிவிசி பகிர்மான குழாயை மாற்றி 3'' பிவிசி பகிர்மான குழாய் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 24,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 8044/2011/இ2)

**தீர்மானம் எண்.59: அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு 11 மேல் நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குளச்சல் காமராஜர் பேருந்து நிலையம் அருகில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் நகராட்சி அலுவலகத்தினுள் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி, கொட்டில்பாடு Church பின்னால் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி ஆகியவற்றை குடிநீரின் அவசர அவசியம் கருதி ஒப்பந்த அடிப்படையில் சுத்தம் செய்வதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.15000/– தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 8013/2011/இ2)

**தீர்மானம் எண்.60: அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சிக்குட்பட்ட குப்பைகள் கொட்டும் இடமான இந்திராகாலனியில்அடிக்கடி தீ பற்றுவதால் தீ அணைப்பு அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டு தீ அணைக்கப்பட்டு வருகிறது. தீ அணைப்பு துறை அதிகாரிகள் ஆலோசனைப்படி தீ பற்றுவது தெரிந்த உடன் அணைப்பதற்கு வசதியாக குப்பைகள் கொட்டும் இடமான இந்திராகாலனி அருகில் செல்லும் Pumping Main-ல் இருந்து அவசரகால உபயோகத்திற்காகவும் அருகில் உள்ள குடியிருப்புகளில் வசிக்கும் பொதுமக்கள் நலன் கருதியும் 3'' பகிர்மான குழாய் அமைக்க மதிப்பீடு ரூ.5000/– தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 8045/2011/இ1)

**தீர்மானம் எண்.61: அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட தினசரி சந்தை வளாகத்தில் அமைந்துள்ள கடையில் (டீ கடைக்காக) மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 5 ஏலதாரர்கள் கலந்து கொண்டனர். அதில் திரு.T.செல்வராஜ் என்பவர் அதிகபட்ச ஏல கேள்வியாக மாத வாடகைக்கு ரூ.7750/– கோரியுள்ளார். ஆகவே மேற்படியாளருக்கு மாத வாடகைக்கு கடையினை ஒப்படைப்பு செய்வது தொடர்பாக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு : நகர்மன்ற ஏலகேள்வியினை விட ஏலதாரர் ரூ.5840/– கூடுதலாக கோரியுள்ளார். மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 5731/2009/அ1)

**தீர்மானம் எண்.62: அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

குளச்சல் நகராட்சியில் தெருவிளக்குகள் பராமரிப்பிற்கு பயன்படுத்திய மின்சாதனங்களுக்கான பழைய மின் சாதனங்கள் கீழ்கண்ட விபரப்படி ஏலத்திற்கு உள்ளன. அதனை ஏலத்திற்கு விடுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

பழைய மின் சாதனங்களின் விபரம்:

| | | |
|---|---|---|
| 1. | 40W குழல் விளக்கு | 3122 Nos. |
| 2. | 40W சோக் | 1801 Nos. |
| 3. | 40W ஸ்டாட்டர் | 3122 Nos, |
| 4. | 250W சோடியம் பல்ப் | 97 Nos. |

| | | |
|---|---|---|
| 5. | 250W சோடியம் சோக் | 40 Nos. |
| 6. | 400W ஹாலஜன் பல்ப் | 6 Nos. |
| 7. | 400W ஹாலஜன் சோக் | 3 Nos. |

இதர பொருட்கள்:

| | | |
|---|---|---|
| 1. | குழல் விளக்கு ஹோல்டர் | 853 Nos. |
| 2. | கண்டென்சர் | 31 Nos. |
| 3. | இக்னேட்டர் | 29 Nos. |
| 4. | சோடியம் ஹோல்டர் | 48 Nos. |
| 5. | 16A பியூஸ் | 11 Nos. |
| 6. | 32A பியூஸ் | 5 Nos. |
| 7. | 63A பியூஸ் | 12 Nos. |

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 5044/2011/இ1)

**தீர்மானம் எண்.63: அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

குளச்சல் நகராட்சியில் குடிநீர் பணிகள் பராமரிப்பிற்கு பயன்படுத்திய குடிநீர் பணிகளுக்கான பழைய பொருட்கள் கீழ்கண்ட விபரப்படி ஏலத்திற்கு உள்ளன. அவற்றை ஏலத்திற்கு விடுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | 12HP மோனோபிளாக் மோட்டார் | 2 Nos. |
| 2. | 10HP சப்மெர்சிபிள் மோட்டார் | 8 Nos. |
| 3. | 5HP சப்மெர்சிபிள் மோட்டார் | 2 Nos. |
| 4. | 1HP சப்மெர்சிபிள் மோட்டார் | 1 No. |
| 5. | 6" Sluice Valve | 11 Nos. |
| 6. | 5" Sluice Valve | 10 Nos. |
| 7. | 4" Sluice Valve | 17 Nos. |
| 8. | 3" Sluice Valve | 13 Nos. |
| 9. | 2" Sluice Valve | 2 Nos. |
| 10. | 2" Gate Valve | 14 Nos. |
| 11. | 2" Air Valve | 5 Nos. |
| 12. | 3" CID Joint Set | 7 Set |
| 13. | 1½" Non return valve | 7 Nos. |
| 14. | Hand Pump | 3 Nos. |
| 15. | 4" GI Bend | 4 Nos. |
| 16. | 3" GI Bend | 2 Nos. |
| 17. | 4" PVC Coupling | 2 Nos. |
| 18. | 3" PVC Coupling | 103 Nos. |
| 19. | 2" PVC Coupling | 50 Nos. |
| 20. | 4" GI Pipe | 6 Piece + 20 Length |
| 21. | 3" GI Pipe | 3 Piece |
| 22. | 2" GI Pipe | 17 Pieces + 20 length |
| 23. | 3" GI Pipe | 9 m |
| 24. | 2" PVC Pipe | 4 Piece |
| 25. | 1" PVC Pipe | 5 Piece |
| 26. | 4" Casing Pipe | 1 Piece |

இதர பொருட்கள்:

| | | |
|---|---|---|
| 1. | Typing Machien | 2 Nos. |
| 2., | T.V.Box | 1 No. |
| 3. | Meter Box | 1 No |
| 4. | Window (Steel) | 1 No. |
| 5. | Pumproom Door | 3 Nos. |
| 6. | Starter | 14 Nos. |
| 7. | Main Switch | 9 Nos. |

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 8058/2011/இ2)

**தீர்மானம் எண்.64: அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.11**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7–ல் சாம்பசிவபுரத்தில் இரண்டு பொது கழிப்பிடம் எண்.13,14ம் பழைய சிங்காரவேலன் காலனி பொது கழிப்பிடம் எண்.15ம் அந்தோணியார் காலனி பொது கழிப்பிடம் எண்.16ம் மற்றும் மரமடி சர்ச் அருகில் உள்ள பழைய கழிப்பிடம் (அருகில் சுத்தம் செய்தல் பணி) மிகவும் மோசமாகி பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. கதவுகள் மற்றும் தரைகள், Closetகள் உடைந்த நிலையிலும் தண்ணீர் குழாய்கள் மற்றும் தொட்டிகள் உடைந்தும் மின்வசதிகள் இல்லாமலும் உள்ளது. பொதுமக்கள் நலன் கருதி மேற்படி கூறப்பட்டுள்ள பொது கழிப்பிடங்களை சரிசெய்வதற்கு மதிப்பீடு ரூ.275000/– தயாரிக்கப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 7053/2011/இ1)

**தீர்மானம் எண்.65: அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

குளச்சல் நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் செய்வதற்கு மதிப்பீட்டு தொகை ரூ.400000/–க்கு 13.12.2011 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மூன்று ஒப்பந்த புள்ளிகள் வரப்பட்டன. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | M/s.மாலானி லைட்டிங் கம்பெனி, திருநெல்வேலி | முன்வைப்பு தொகை இணைக்கப்படாத காரணத்தால் ஒப்பந்தப்புள்ளி ஏற்று கொள்ளாமல் நிராகரிக்கப்பட்டது. |
| 2. | M/s.JES எலக்ட்ரிக்கல்ஸ், திருத்துவபுரம். | மதிப்பீட்டு இனம் எண்.1க்கு 40 வாட் குழல் விளக்கு Fluorescent Fittings விநியோகம் செய்வதற்கு மதிப்பீட்டை விட 0.83 % குறைத்து கொடுத்துள்ளார். |
| 3. | TR டிரேடர்ஸ், தாழக்குடி | மதிப்பீட்டு இனம் எண்.9க்கு 3/20 அலுமினியம் ஒயர் விநியோகம் செய்வதற்கு மதிப்பீட்டை விட 63.16 % குறைத்து கொடுத்துள்ளார். |

மேலும் மீதமுள்ள மதிப்பீட்டில் உள்ள இனம் எண்.2,3,4,5,6,7,8 ஆகியவற்றிற்கு இரண்டு விநியோகதாரர்களும் மதிப்பீட்டைவிட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார்கள். மேலும் இந்நகராட்சியில் தெருவிளக்குகள் பராமரிப்பதற்கு குறைவான உதிரிபாகங்கள் உள்ளதாலும் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி கூறப்பட்டுள்ள இனங்களுக்கு இரண்டு நிறுவனங்களுக்கும் மதிப்பீட்டைவிட விலை குறைத்து ஒப்பந்தப்புள்ளிகள் இசைவு கடிதம் வழங்க கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி 27.12.2011 அன்று இரண்டு நிறுவனங்களும் இசைவு கடிதம் அனுப்பிஉள்ளதின்படி JES எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனம் ஒப்பந்தப்புள்ளியில் கொடுக்கப்பட்டுள்ள விலை விகிதத்தைவிட குறைத்து கொடுக்க இயலாது என இசைவு கடிதத்தில் கோரியுள்ளார். மேலும் TR டிரேடர்ஸ் தங்களது இசைவு கடிதத்தில் கீழ்கண்டபடி கொடுத்துள்ளார்.

| | |
|---|---|
| 1. | மதிப்பீட்டு இனம் எண்.2–க்கு 40 வாட் குழல் விளக்கு விநியோகம் செய்யும் வகைக்கு மதிப்பீட்டைவிட 2.5% குறைத்து கொடுத்துள்ளார். |
| 2. | மதிப்பீட்டு இனம் எண்.3–க்கு 40 வாட் காப்பர் சோக் விநியோகம் செய்யும் வகைக்கு மதிப்பீட்டைவிட 0.77% குறைத்து கொடுத்துள்ளார். |
| 3. | மதிப்பீட்டு இனம் எண்.4–க்கு 40 வாட் Starter விநியோகம் செய்யும் வகைக்கு மதிப்பீட்டைவிட 6.25% குறைத்து கொடுத்துள்ளார். |
| 4. | மதிப்பீட்டு இனம் எண்.5–க்கு Side holder விநியோகம் செய்யும் வகைக்கு மதிப்பீட்டைவிட 8.33% குறைத்து கொடுத்துள்ளார். |
| 5. | மதிப்பீட்டு இனம் எண்.6–க்கு Insulation Tape விநியோகம் செய்யும் வகைக்கு மதிப்பீட்டைவிட 10% குறைத்து கொடுத்துள்ளார். |
| 6. | மதிப்பீட்டு இனம் எண்.7–க்கு 16A Fuse Carrier விநியோகம் செய்யும் வகைக்கு மதிப்பீட்டைவிட 6.25% குறைத்து கொடுத்துள்ளார். |

| | |
|---|---|
| 7. | மதிப்பீட்டு இனம் எண்.8–க்கு 32A Fuse Carrier விநியோகம் செய்யும் வகைக்கு மதிப்பீட்டைவிட 2.35% குறைத்து கொடுத்துள்ளார். |

எனவே மேற்படி குறிப்பிட்டுள்ளபடி மதிப்பீட்டு இனம் எண்.1–க்கு மேற்படி விநியோகதாரர்கள் இருவரில் மதிப்பீட்டைவிட குறைத்து கொடுத்துள்ள JES எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றும் இனம் எண்.2 முதல் 9 வரை மேற்படி விநியோகதாரர்கள் இருவரில் மதிப்பீட்டைவிட குறைத்து கொடுத்துள்ள TR டிரேடர்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றும் விநியோக உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு: 1.மேற்படி பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.400000/–க்கு நகர்மன்ற தீர்மான எண்.1686 நாள்.29.7.2011–ன்படி மன்றம் ஒப்புதல் வழங்கி உள்ளது.

2.மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைத்து கொடுத்துள்ள மதிப்பீட்டு இனம் எண்.1க்கு JES எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கவும் மதிப்பீட்டு இனம் எண்.2 முதல் 9 வரை TR டிரேடர்ஸ் நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 5044/2011/இ1)

**தீர்மானம் எண்.66: அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.13**

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் செயல்முறை ந.க.எண்.29255/2011/இ3 நாள்.1.12.2011 மின் அஞ்சல் கடிதத்தின்படி குளச்சல் நகராட்சியில் பிளாஸ்டிக் கழிவுகளை உபயோகித்து சாலை அமைக்க போக்குவரத்து குறைவாக உள்ள சாலைகள் 2011–2012 ஆண்டு முதல் 2015–2016 வரை ஐந்து வருடங்கள் கீழ்கண்ட வரிசைபடி (Priority) பணிகள் செய்ய தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ எண். | சாலையின் பெயர் | நீளம் (கி.மீ.) | மதிப்பீடு ரூ.லட்சத்தில் | வேலை நடைபெறும் ஆண்டு |
|---|---|---|---|---|
| 1. | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சிங்கன்காவு சாலையில் பிளாஸ்டிக் சாலை அமைத்தல் | 1.500 | 16.00 | 2011-2012 |
| 2. | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட திருவள்ளுவர் சாலையில் பிளாஸ்டிக் சாலை அமைத்தல். | 1.105 | 16.40 | 2012-2013 |
| 3. | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட புதுதெருவில் பிளாஸ்டிக் சாலை அமைத்தல். | 0.500 | 5.85 | 2013-2014 |
| 4. | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பொட்டல் பாலாத்தன்கரையில் பிளாஸ்டிக் சாலை அமைத்தல். | 0.700 | 8.95 | 2014-2015 |
| 5. | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மலிகாகிணறு சாலையில் பிளாஸ்டிக் சாலை அமைத்தல். | 0.600 | 6.70 | 2015-2016 |

மேற்படி தேர்வு செய்யப்பட்டுள்ள சாலைகளில் 2011–2012ம் ஆண்டில் திட்டப்பணியில் செயல்படுத்த சிங்கன்காவு சாலையில் மதிப்பீடு தொகை ரூ.16 லட்சத்தில் பிளாஸ்டிக் சாலை அமைப்பதற்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களால் 5.12.2011–ல் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் உடன் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு அறிவுறுத்தியதின் பேரில் பணி அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று திட்ட பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு: மேற்படி பணி அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மதிப்பீடு தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.6816/2011/இ1)

**தீர்மானம் எண்.67: அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.14**

இந்நகராட்சி கணனி அறையிலுள்ள 5KVA UPS-ன் பேட்டரி மாற்றி புதிய பேட்டரி பொருத்தவும் பழைய பேட்டரிக்கு விலை வைத்து எடுக்கவும் மதிப்பீடு தொகை ரூ.145000/—க்கு 28.12.2011 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டன. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | M/s.பிரகாஷ் ஏஜென்ஸி, மார்த்தாண்டம் | மதிப்பீட்டை விட 1.21 % குறைவு. (ரூ.143150/—) |
| 2. | M/s.I Net Solution, மார்த்தாண்டம். | மதிப்பீட்டை விட 0.59 % குறைவு. (ரூ.144050/—) |
| 3. | M/s.Hykon India Pvt.Ltd., கோயம்புத்தூர். | மதிப்பீட்டை விட 25.12 % குறைவு. (ரூ.108500/—) |

மேற்படி பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைத்து கொடுத்துள்ள மூவரில் 25.12 % குறைத்து கொடுத்துள்ள ஹைகான் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு: 1.மேற்படி பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.145000/—க்கு நகர்மன்ற தீர்மான எண்.21 நாள்.24.11.2011—ன் படி மன்றம் ஒப்புதல் வழங்கி உள்ளது.

2.மேற்படி பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 25.12% குறைத்து கொடுத்துள்ள ஹைகான் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3562/2007/அ2)

**தீர்மானம் எண்.68: அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.15**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட டாக்டர்,அம்பேத்கார் தினசரி சந்தையில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள கொட்டகைகள் தற்சமயம் பெய்த மழையினாலும், காற்றினாலும் சேதமடைந்து பொதுமக்களுக்கு ஆபத்து விளைவிக்கும் நிலையில் உள்ளதால் தற்காலிகமாக சரிசெய்ய மதிப்பீடு தொகை ரூ.63000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.8066/2011/இ1)

**தீர்மானம் எண்.69: அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.16**

இந்நகராட்சிக்குட்பட்ட டாக்டர்,அம்பேத்கார் தினசரி சந்தையினுள் அமைந்துள்ள புளியமரத்தின் வேர்கள் அருகில் உள்ள வணிகவளாக கட்டிடத்திற்கு சேதம் விளைவிக்கும் வகையில் உள்ளதாலும் மிகவும் பழமையான மரமாக உள்ளதாலும் பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்படுத்தும் வகையில் உள்ளதாலும் மேற்படி மரத்தை வெட்டி அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,

அ.குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.8060/2011/இ1)

**தீர்மானம் எண்.70: அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.17**

இந்நகராட்சிக்குட்பட்ட ஆழ்துளை கிணறு எண் 1,3,6,12 மற்றும் மாதாகாலணி Sump-க்குள் உள்ள Mono Block ஆகிய பழுதான மோட்டார்கள் மாற்றி இருப்பில் இருக்கும் மோட்டார்களை மேற்படி கூறப்பட்டுள்ள ஆழ்துளை கிணறுகளில் இறக்குவதற்கு மதிப்பீடு தொகை ரூ. 25000/— க்கு 28.12.2011 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பட்டன. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.P. தங்கமணி ஒப்பந்தகாரர் | மதிப்பீட்டை விட 2.95% கூடுதல் (ரூ.25110/–) |
| 2 | திரு.C.சந்திரசேகர் ஒப்பந்தகாரர் | மதிப்பீட்டை விட 0.03% குறைவு (ரூ.24381/–) |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.03% குறைத்து கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு. C.சந்திரசேகர் ஒப்பந்தபுள்ளியை ஏற்று வேலை உத்தரவுவழங்க மன்றம் அனுமதி வழங்கலாம் .

அ.குறிப்பு: 1. மேற்படி பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.25000/– க்கு நகர்மன்ற தீர்மான எண் 32 நாள் 24.11.11 ன் படி மன்றம் ஒப்புதல் வழங்கி உள்ளது.

2.மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட0.03% குறைத்து கொடுத்துள்ள ஒப்பந்தகாரர் திரு. சந்திரசேகர் ஒப்பந்தபுள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம் .

(ந.க.எண்.7410/2011/இ2)

**தீர்மானம் எண்.71: அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்
குளச்சல் நகராட்சி